# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 186/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : திரு. மாரியப்பன் (காவல் ஆய்வாளர்) (P.w.9)
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of January 2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது மதுரை மாவட்டம் பேரையூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 05.02.2018ம் தேதியன்று திருச்சுழி காவல் நிலைய வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருச்சுழி காவல் நிலைய குற்ற எண். 21/2018 பிரிவு 279, 337, 338 இதசவாக பதிவு செய்யப்பட்டு பின்னர் 279, 304(ஏ) இதசவாக மாற்றம் செய்யப்பட்ட வழக்கினை எனது மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திரு.அசோக்பாபு என்பவரிடம் பெற்று எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். சம்பவ இடத்தை ஏற்கனவே இந்த வழக்கினை புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.அசோக்பாபு என்பவர்

பார்வையிட்டு பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் தயார் செய்ததால் நான் தனியாக எதுவும் தயார் செய்யவில்லை. பார்வை மகஜர் சாட்சிகள் பஞ்சவர்ணம், தங்கபாண்டியன் அனைவரும் சார்பு ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. மேலும் சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளான நாகராஜன், பூமயில், ராஜலட்சுமி, லட்சுமணன், சின்னதம்பி , வாசுகி, சுரேஷ் ஆகியோர்களை நான் விசாரணை செய்தபோது அவர்கள் சார்பு ஆய்வாளரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை. 25.01.2018ம் தேதியன்று காலை 11.00மணிக்கு எதிரி திருச்சுழி காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானபோது அவரை கைது செய்து தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார்.

2. இந்த வழக்கில் 24.05.2018ம் தேதியன்று இந்த வழக்கில் புகார் மனு பெற்று வழக்கு பதிவு செய்து அதன்பின்னர் ஆரம்ப கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.அசோக் பாபு அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். 29.1.2018ம் தேதியன்று இவ்வழக்கில் இறந்துபோன அழகர்சாமி என்பவரின் சடலத்தை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். (**அந்த பிரேத விசாரணை அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்பு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மதுரை மருத்துவ கல்லூரி பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் தயார் செய்து மு.நி.கா. பாலசுப்பிரமணியன் என்பவர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். அவரையும் விசாரரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் ஜீலியானா ஜெயந்தி என்பவரை 24.05.2018ம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். (**அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் 24.05.2018ம் தேதியன்று விபத்திற்குண்டான வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்

திரு.மாணிக்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். **(TN 67 AH 6467 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை அசாஆ.9 குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் 24.05.2018ம் தேதியன்று வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 279, 304(A)–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி–**

குற்ற இறுதிஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல் எதிரியின் அதிவேகமாகவும், அஜாக்கிரதையும் விபத்திற்கு காரணமில்லை என்றாலும் இறந்துபோனவரின் கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் விபத்திற்கு கண்ணுற்ற சாட்சி கிடையாது என்றால் சரியல்ல. பொய்யான சாட்சிகள் என்பதால்தான் புகார்தாரரே நீதிமன்றத்தில் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை எனவும் சம்பவம் கேள்விபட்டுதான் சம்பவம் இடத்திற்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. புகார் மனுவானது சம்பவம் நடந்து 5 நாட்கள் கழித்துதான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகாரில் எதிரி சம்பவ இடத்தில் மனிதாபிமானத்தின் அடிப்படையில் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவு காரணமில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.